சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.10.09.2024
OS.No.68/2022
PW 1 : ஜோசப் ஸ்டீபன் (வயது 66 ) த/பெ. மாணிக்கம்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தை எனது தகப்பனார் 1979 ல் கிரயம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் தான் எனது தகப்பனார் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஏற்பட்ட விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, கேள்வி பட்ட விவரம் தான். வா.சா.ஆ.3 ஆவணம் எழுதுவதற்கு யார் விவரம் கூறினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விவரத்தை எனது தகப்பனாரிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.3 ஆவணத்திற்கான மூல பத்திரம் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 மூல பத்திரத்தை அடிப்படையாக வைத்து தான் வா.சா.ஆ.3 கிரய ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு மூல ஆவணமான வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரத்தில் கிழ மேல் காலடி 13 தென்வடல் காலடி 41 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரயம் வாங்கிய வா.சா.ஆ.3 பத்திரத்தில் சொத்து விவரத்தில் கிழமேல் ஜாதியடி 24 தென்வடல் ஜாதியடி 30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு காலடி என்பது 9 அங்குலம் என்றும் ஜாதியடி என்பது 12 அங்குலம் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதன்படி எனது தகப்பனார் வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளை விட கூடுதலான அளவுகளை வா.சா.ஆ.3 மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. கைலாச உடையார் தனது சகோதரர் தணக்கப்ப உடையாருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தில் கண்டுள்ள அளவுகளை விட கூடுதலான விஸ்தீரணத்தை எனது தகப்பனாருக்கு, தணக்கப்ப உடையார் எதன் அடிப்படையில் கிரயம் செய்து கொடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. சாட்சி தானாக முன்வந்து அது பூர்வீக சொத்து என்று கூறுகிறார். நான் கூறுவது போல் எனது தகப்பனார்கிரயம் பெற்ற சொத்து, கிரயம் கொடுப்பவரின் பூர்வீக சொத்து என்பதை காட்ட ஆவணம் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் 1986ல் எனது தகப்பனார் கூட்டு பட்டா வாங்கியுள்ளார். அந்த கூட்டுப்பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 50 நபர்களின் பெயரில் கூட்டாக உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் புதிய சர்வே எண். 32/31 ஆகும். வா.சா.ஆ.7 மனை வரி தோராய பட்டா நத்தம் சர்வேயின் போது எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 தாலுகா

அலுவலகத்தில் மனு கொடுத்து பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண்.32/31 க்கு எனது தகப்பனாருக்கு வழங்கிய அசல் பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தகப்பனார் பட்டா வாங்கவில்லை. எனது தகப்பனாருக்கு ஏற்கனவே வழங்கிய பட்டாவின் நகலை தான் தற்போது வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2006 ல் இறந்தார். அவர் இறப்பதற்கு முன்பே அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 32/31 ன் சர்வே வரைபடத்தில் எவ்வளவு அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். சர்வே வரைபடத்தில் கிழமேல் அளவுகள் வடபுறம் 19 அடி, தென்புறம் 19 அடி உள்ளது. மீட்டர் அளவுகளில் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தென்வடல் மேல் புறமும் கீழ்புறமும் எத்தனை மீட்டர் அளவுகள் என்றால் 100 அடி என்று தான் தெரியும் மீட்டர் அளவுகளில் தெரியாது. நான் சொன்ன அளவுகள் சரியான அளவுகள் தானா என்றால் சரியான அளவுகள் இல்லை. 24 அடி அளவுகள் இல்லை, 19 அடி அளவுகள் மட்டுமே உள்ளது. எந்த ஆவணத்தில் உள்ள அளவுகள் தவறாக உள்ளது என்றால் பட்டாவில் உள்ள அளவுகள் தவறாக உள்ளது. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி அவரது பெயரில் வழங்கிய பட்டாவில் உள்ள அளவுகள் தவறானது என்று கூறி, மேல் முறையீடு தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்தார். அதற்கான ஆவணம் எதுவும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அனைத்தும் கொடுத்துள்ளேன். அது பற்றி விவரத்தை எனது வழக்கு பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூன்று முறை தாக்கல் செய்துள்ளேன். அந்த மேல்முறையீட்டு மனுவிற்கு ஆதரவாக எனது தகப்பனார் பெயரில் உள்ள பத்திரம் வா.சா.ஆ.3 ம் தணக்கப்ப உடையார் பெயரில் உள்ள பத்திரம் வா.சா.ஆ.2 ம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் நான் கொடுத்த மனுவை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. மாவட்ட ஆட்சியரிடம் அது குறித்து மனு கொடுத்தேன்.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/signed /
ஜோசப் ஸ்டீபன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

சார்பு நீதிபதி
இலால்குடி